## 4.9 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விளையாட்டு மையங்களின் சாதனங்களை பராமரித்தல் மற்றும் பழுது நீக்குதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி.2) துறை

அரசாணை (நிலை) எண். 80 நாள் : 30.5.2007

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 115, ஊவ (ம) ஊ. துறை நாள் 11.9.2006
2. அரசாணை (நிலை) எண். 189, ஊ.வ.(ம) ஊ. துறை நாள் 27.12.2006
3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரின் நேர்முகக் கடித எண். 48049/06–SS.II, நாள் 25.4.2007

**ஆணை**

படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து வட்டாரங்களிலும் ஊராட்சிகளின் கட்டுமான வசதிகளை நிறைவேற்றும் நோக்கோடு ஐந்தில் ஒரு பங்கு ஊராட்சிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அரசு உதவிபெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள விளையாட்டு மையங்கள் மற்றும் சமுதாய விளையாட்டு மையங்களுக்கென வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 1 லட்சத்திலிருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்கப்படவேண்டும். மேலும் கீழ்கண்ட வசதிகள் அனைத்து கிராம அண்ணா மறு மலர்ச்சித் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு செய்யப்பட வேண்டும்.

i) ஒரு கைப்பந்து (Volley Ball) மைதானம் தேவையான உபகரணங்களுடன்

ii) ஒரு பூப்பந்து (Badminton) மைதானம் தேவையான உபகரணங்களுடன்

iii) ஒரு வலைப்பந்து (Tennicoit) மைதானம் (பெண்களுக்கானது) தேவையான உபகரணங்களுடன்

iv) கிரிக்கெட் விளையாட்டுப் பொருட்கள், தரைவிரிப்பு மற்றும் பயிற்சி வலை.

v) நீளம் தாண்டுதல் மற்றம் உயரம் தாண்டுதலுக்கான மணற்குழி தேவையான உபகரணங்களுடன்

vi) மேல்உந்து கம்பம் (Pullup Bars) மற்றும் உபகரணங்கள்

vii) சதுரங்கப்பலகை (Chess Board) மற்றும் கேரம் பலகை (Carrom Board)

viii) சிறுவர் / சிறுமியர்களுக்கான ஏற்ற இறக்க பலகை (Seasaw) சறுக்கு (Slides) மற்றும் ஊஞ்சல் (Swings)

2. மேலும் படிக்கப்பட்டவை மூன்றில் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இந்த விளையாட்டு மையங்களுக்கு வழங்கப்படும் விளையாட்டு சாதனங்கள் காலப்போக்கில் உபயோகத்தினால் பழுதடைய வாய்ப்புள்ளதால் விளையாட்டு மையங்கள் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்திட அவ்விளையாட்டு சாதனங்களை பழுது நீக்கம் செய்யவேண்டியது அவசியம். பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையங்களிலுள்ள விளையாட்டிற்கான வசதிகள் மற்றும் பந்துகள், வலைகள் ஆகியவற்றை மாற்றுவது போன்ற பணிகளை செய்ய வேண்டியது கிராம ஊராட்சிகள் கடமை என்று 1994–ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111(H) ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் விளையாட்டு சாதனங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் ஆகியவற்றிற்கு ஊராட்சி நிதியிலிருந்து செலவிட ஊராட்சி தலைவருக்கு அதிகாரம் வழங்க வேண்டியது அவசியம். அவ்வாறு பராமரிப்பிற்கு செலவிட ஊராட்சித் தலைவர்களை அனுமதிக்கும்போது செலவினத்திற்கு உச்ச வரம்பினை நிர்ணயிக்கவேண்டியதும் அவசியம். எனவே, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111(H) விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி பொது நிதியிலிருந்து விளையாட்டு சாதனங்கள் பழுது நீக்கம் மற்றும் மாற்றுவது ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ. 10,000/–க்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கலாம் என்றும் இந்த செலவினம் சமுதாய விளையாட்டு மையங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு மையங்கள் ஆகிய இரண்டு இனங்களுக்கும் பொருந்தும் எனவும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனத்துடன் பரிசீலித்து அதை ஒப்புக்கொள்ள முடிவு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது 1994–ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111(H) விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி பொது நிதியிலிருந்து விளையாட்டு சாதனங்கள் பழுது நீக்கம் மற்றும் மாற்று சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 10,000/–க்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இந்த

செலவினம் சமுதாய விளையாட்டு மையங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு மையங்கள் ஆகியவற்றிற்கும் பொருந்தும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. விளையாட்டு சாதனங்கள் பராமரிப்பு மற்றும் கொள்முதல் செய்வதற்கான செலவினம் மேற்கொள்வது குறித்து தக்க நெறிமுறைகள் (Norms) வகுத்திடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 27822/RD/2007 நாள் 10.5.2007–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்